**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

OS.No.677/2019 பெயர் : சக்திவேல் நாள் : 06.02.2026

வா.சா. ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நான் எலவமலை கிராமம், மூலப்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். தாவா சொத்து ஆதியில் யாருக்குப் பாத்தியம் என்றால், என் தாத்தா புருங்கான் என்கிற ரெங்கசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்து ஆகும். புருங்கான் என்கிற ரெங்கசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதற்கு ஆவணங்கள் ஏதாவது உள்ளதா என்றால், இல்லை. அவருக்கு இறப்பு சான்று மற்றும் வாரிசு சான்று உள்ளதா என்றால், இல்லை. புருங்கான் என்கிற ரெங்கசாமிக்கு தாவா சொத்து பூர்வீக சொத்து ஆகும். ரெங்கசாமியின் அப்பாவின் சொத்தா அல்லது ரெங்கசாமியின் தாத்தாவின் என்று தெரியுமா என்றால், தெரியாது. ரெங்கசாமியின் மகன் பெரியசாமிக்கு 2 மனைவிகள் என்றால், சரிதான். முதல் மனைவி நாச்சாயி குழந்தை பிறந்தவுடன் இறந்து விட்டார், 2-வதாக செம்பாயி என்பவரை திருமணம் செய்தார், அவர் மூலம் 3 பிள்ளைகள் உள்ளனர். நாச்சாயியின் இறப்பு சான்று மற்றும் வாரிசு சான்று உள்ளதா என்றால், இல்லை. ரெங்காமிக்கு மொத்தம் 3 மகன்கள், 3 பேரும் சொத்தை கூட்டாக அனுபவம் செய்ததற்கான ஆவணங்கள் உள்ளதா என்றால், இல்லை, வருவாய் ஆவணங்கள் ரெங்கசாமியின் பெயரில் தான் உள்ளது. 14.11.2013-ம் வருடம் ஒரு பாகப்பிரிவினைப் பத்திரம் எழுதிக் கொண்டார்கள் என்றால், சரிதான், அதுக்குறித்து எனக்கு 2019-ம் வருடம் தான் தெரிய வந்தது. 2013-ம் வருடம் எழுதப்பட்ட பாகப்பிரிவினைப் பத்திரம் நடைமுறைக்கு வந்ததைப் பற்றி தெரிந்து கொண்டீர்களா என்றால், 2019-ல் தெரிந்து கொண்டேன். 2013-ம் வருடம் பாகப்பத்திரம் அடிப்படையில் பட்டா மாறுதல் ஏற்பட்டுவிட்டது என்பதை தெரிந்து கொண்டீர்களா

என்றால், தெரிந்து கொண்டேன். 2013-ன் பாகப்பிரிவினைப் பத்திரத்தின் படி பாகத்தை அடைந்து அனுபவித்து வருகிறார்கள் என்பதை 2019-ம் வருடம் தெரிந்து கொண்டேன். 2019-ம் வருடம் மோசடியாக பாகப்பிரிவினைப் பத்திரம் ஏற்படுத்திக் கொண்டார்கள் என்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால், புகார் கொடுத்தேன். அந்த புகார் நகல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. அந்த புகாரின் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால், சரிதான். வாதிகள் மொத்தம் எத்தனை பேர் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால், 13 நபர்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். அனைவரும் வெவ்வேறு ஊர்களில் வசித்து வருகிறீர்களா என்றால், இல்லை, ஒரே ஊரில் வசித்து வருகிறோம். 3-ம் வாதி ரேணுகாதேவி சேலம் மாவட்டம், மேட்டுரில் உள்ளார் என்றால், சரிதான். 4-ம் வாதி புஷ்பா நாமக்கல் மாவட்டம், குமாரபாளையத்தில் வசித்து வருகிறார் என்றால், சரிதான். 13-ம் வாதி ரேவதி என்பவர் ஊராட்சிக்கோட்டையில் வசித்து வருகிறார் என்றால், சரிதான். 22-ம் வாதி மைதிலி என்பவர் பவானி நகரத்தில் வசித்து வருகிறார் என்றால், சரிதான். வாதிகள் சொத்தை அனுபவம் செய்வதற்கு, பிரதிவாதிகள் விரும்பவில்லை என்றால், சரிதான்.

முழுச் சொத்தும் எங்களுக்கு விடாமல், பிரதிவாதிகள் எடுத்துக் கொண்டார்கள் என்றால், சரிதான். வாதிகள் பெயரில் கந்தாயம் இதுவரை செலுத்தியது இல்லை என்றால், சரிதான். வாதிகள் பெயரில் வருவாய் ஆவணங்கள் பட்டா, சிட்டா இதுவரை இல்லை என்றால், சரிதான். இந்த வழக்கில் எங்களுக்கு சாதகமானால் தான் நாங்கள் தாவா சொத்தில் நுழைய முடியும் என்றால், சரிதான். தாவா சொத்தின் சர்வே எண்கள் எனக்கு தெரியாது. எத்தனை அயிட்ட சொத்துக்கள் பிராதில் காட்டப்பட்டுள்ளது என்றால், 2 அயிட்டச் சொத்துக்கள் பிராதில் காட்டப்பட்டுள்ளது. 1-வது அயிட்டச் சொத்தில் எத்தனை தாக்குகள் உள்ளது என்றால், எனக்கு தெரியாது, 66 என்பது 1-வது

அயிட்டம், 77 என்பது 2-வது அயிட்ட சொத்து ஆகும். புருக்கான் என்கிற ரெங்கசாமிக்கு எலவமலையில் குடியிருக்க வீடு உள்ளது என்றால், சரிதான். மூலப்பாளையத்தில் தார்சு வீடும் உள்ளது, ஓட்டு வீடும் உள்ளது. இரண்டும் சேர்த்து 20 சென்ட் இருக்கும். அந்த வீட்டின் சர்வே எண் எனக்கு தெரியாது. அந்த வீட்டில் வாதிகளாகிய எங்களுக்கு வாரிசு அடிப்படையில் பாகம் உள்ளதா என்றால், உள்ளது. இந்த வழக்கில் அந்த 20 சென்ட் வீட்டை பிரிக்க சொல்லி பரிகாரம் கேட்டுள்ளீர்களா என்றால், கேட்கவில்லை, வீட்டை முன்பே பாகம் பிரித்துக் கொண்டார்கள். எந்த வருடம் பிரித்து கொண்டார்கள் என்று தெரியாது. வீட்டை பிரித்து கொண்டதற்கு பத்திரம் எழுதிக் கொண்டார்கள். அந்த பத்திரத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்க முடியுமா என்றால், ஒப்படைக்க முடியும். வீட்டை பிரித்துக்கொண்டபோது நாங்களும் பாகப்பிரிவினைப் பத்திரத்தில் கையொப்பம் செய்தோம். யார் யார் கையொப்பம் செய்தோம் என்றால், பெரிய மாரி, மாரிமுத்து, ஈஸ்வரன், சோமசுந்தரம் ஆகியோர் கையொப்பம் செய்தோம். பெரிய ராமசாமியின் வாரிசு அடிப்படையில் நாங்கள் சொத்து கேட்கிறோம். நாங்கள் இளைய மனைவியின் வாரிசுகள் ஆவோம்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**